6

# தொழுகைக்கு ஆயத்தமாவோம்

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ فَاغْسِلُوْا وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ
اِلَى الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ وَاَرْجُلَكُمْ اِلَى الْكَعْبَيْنِ (5:6)

## வுழூ



ஒரு முஸ்லிம் தன் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சுத்தத்தைப் பேணி நடக்கக் கடமைப்பட்டுள்ளான்.

தொழுகை, கஃபாவைத் தவாபு செய்தல் போன்ற இபாதத்துக்களை நிறைவேற்றுவதற்கு அடிப்படை நிபந்தனையாகவும் சுத்தம் வலியுறுத்தப் படுகிறது.

தொழுகைக்கு ஆயத்தமாகின்ற ஒருவன் சிறுதொடக்கு, பெருந்தொடக்கு என்பவற்றிலிருந்து நீங்கி சுத்தமாக இருத்தல் வேண்டும். இது தொழுகையின் ஷர்த்துக்களில் ஒன்றாகும்.

சிறுதொடக்கு என்பது வுழூ இல்லாத நிலையாகும்.பெருந்தொடக்கு என்பது குளிப்பதைக் கடமையாக்கியுள்ள சந்தர்ப்பமாகும்.

எனவே சிறுதொடக்கிலிருந்து நீங்குவதற்கு வுழூ செய்தல் வேண்டும். தொழுகையை நிறைவேற்றுவோர் வுழூ எனும் முன்னாயத்தம் செய்வது கடமையாகும். இதைப்பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

''ஈமான் கொண்டோரே! நீங்கள் தொழுகைக்காகத் தயாராகி விட்டால் உங்களது முகங்களையும் முழங்கை வரையான உங்கள் கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். உங்கள் தலைகளையும் 'மஸ்ஹ்' செய்து கொள்ளுங்கள். உங்கள் கால்களையும் கணுக்கால் வரையும் கழுவிக் கொள்ளுங்கள்''. (ஸூரதுல் மாஇதா 05:06)

''உங்களில் ஒருவர் வுழூ செய்து கொள்ளும் வரையில் உங்களது தொழுகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.'' (புகாரி)

எனவே தொழுகை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு வுழூ செய்தல் கட்டாயக் கடமையாகும் என்று தெளிவாகிறது.

வுழூ செய்வதனால் அடியார்களது பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன. இதுபற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஒரு ஹதீஸ் பின்வருமாறு,

''வுழூ செய்யும் ஒருவர் வுழூவின் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் கழுவும் போது அவற்றிலிருந்து வுழூ செய்த நீர் வடியும் போதே அவ்வுறுப்புக்களால் செய்யப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன'' (முஅத்தா மாலிக்)

நிச்சயமாக வுழூவின் காரணமாக எனது உம்மத்தினர் மறுமையில் முகம் இரு கைகள், இரு கால்கள் பிரகாசம் மிக்கவர்களாக (ஹுர்ரன் முஹஜ்ஜலீன்) எழுப்பப்படுவார்கள். (புகாரி முஸ்லிம்)

இத்துணை சிறப்புமிக்க வுழூவை அதன் பர்ளுகள் ஷர்த்துக்களைப் பேணி மேற்கொள்ளும் போதுதான் வுழூ பூரணமடையும். தொழுகையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

## தயம்மும்

தொழுகைக்கான முன்னாயத்தங்களில் சிறுதொடக்கை நீக்க வுழூ செய்தல் கடமை என்பதையும் அது பற்றிய விளக்கங்களையும் ஆறாம் தரத்தில் கற்றோம். அதே போன்று வுழூ செய்ய முடியாத நிலையில் வுழூவுக்குப் பகரமாகத் தயம்மும் என்ற முறையும் உண்டு. இப்பாடத்தில் தயம்மும் பற்றி அறிந்து கொள்வோம்.



தயம்மும் என்பது கடமையான குளிப்புக்காகவோ வுழூவுக்காகவோ தண்ணீரைப் பயன்படுத்த முடியாத போது அதற்குப் பதிலாக சுத்தமான மண்ணைப் பயன்படுத்தி முகம் மற்றும் இரு கைகளையும் மஸ்ஹு செய்வதை (தடவுவதை)க் குறிக்கும்

**தயம்மும் செய்வதற்கான நிபந்தனைகள்:**

1. சிரமப்பட்டுத் தேடியும் தண்ணீர் கிடைக்காமை
2. தண்ணீரை உபயோகிப்பதனால் நோய் ஏற்படலாம் அல்லது நோய் அதிகரிக்கலாம் எனும் நிலை.
3. கையிருப்பில் உள்ள நீரைப் பயன்படுத்தினால் அத்தியவசியத் தேவைக்கு நீர் போதாமல் போகும் என்ற நிலை

எனவே தண்ணீர் இல்லை என்ற காரணத்துக்காக ஒரு முஸ்லிம் தொழாமலோ சுத்தம் செய்யாமலோ இருக்க முடியாது. மண்ணைப் பயன்படுத்தி தனது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

அல் குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது

''நீங்கள் நோயாளியாகவோ பிரயாணியாகவோ இருக்கும் போது மலம் கழித்தாலோ பெண்களைத் தீண்டினாலோ சுத்தமாக வேண்டிய சந்தர்ப்பத்தில் நீரைப் பெற்றுக் கொள்ளவில்லையாயின் நல்ல

மண்ணைக் கொண்டு உங்கள் முகங்களையும் கைகளையும் தடவிக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 4: 43)

**தயம்மும் செய்யும் முறை**

நிய்யத்தை மனதில் இருத்திக் கொண்டு ''பிஸ்மில்லாஹ்'' என்று கூறி இரு கைகளையும் சுத்தமான மண்ணில் அழுத்த வேண்டும். பின் இரு உள்ளங் கைகளையும் புறங்கைப் பக்கமாகத் தட்டி முகத்தை மஸ்ஹ் செய்ய வேண்டும். பின்பு மீண்டும் இரு கைகளையும் மண்ணில் அழுத்தி புறங்கைப் பக்கமாகத் தட்டி இரு கைகளையும் முழங்கை வரை மஸ்ஹ் செய்ய வேண்டும்.

தயம்மம் செய்பவர் ஒவ்வொரு பர்ளான தொழுகைக்கும் தயம்மும் செய்து கொள்ள வேண்டும். ஆனால் ஒரு முறை செய்த தயம்மும்மில் பல ஸுன்னத்தான தொழுகைகளை தொழலாம்.

**தயம்முமை முறிக்கும் காரியங்கள்**

1. வுழூவை முறிக்கும் அனைத்து காரியங்களும்.
2. தண்ணீரின்றி தயம்மும் செய்து குறிப்பிட்ட தொழுகையைத் தொழுவதற்கு முன்னர் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளல்.
3. நோயின் காரணமாகத் தயம்மும் செய்து தொழுவதற்கு முன் அந்நோய் குணமடைதல்.

## ஜபீரத்

ஜபீரத் என்பது உடலில் ஏதாவது உறுப்புக்களில் காயம் ஏற்பட்டதற்காகப் போடும் கட்டு (பென்டேஜ் / பிளாஸ்டர்) என்பதாகும்.

இஸ்லாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தொழுகையை விடுவதற்கு அனுமதிக்கவில்லை. மாறாக சிரமமான சந்தர்ப்பங்களில் சில சலுகைகளை வழங்கியுள்ளது. அந்த வகையில் உடல் உறுப்புக்களில் கட்டு (பென்டேஜ்) போடப்பட்ட ஒருவர் தொழுகையை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

- ஜபீரத் (பென்டேஜ் / பிளாஸ்டர்) போடுவதற்கு முன் வுழூ செய்து கொள்ளல்.
- வுழூவின் உறுப்புக்களில் ஜபீரத் போடப்பட்டிருந்தால் ஏனைய உறுப்புக்களில் வுழூ செய்து கொள்வதுடன் ஜபீரத் போடப்பட்ட பகுதியை நீரால் தடவுவதுடன் தயம்முமும் செய்துகொள்ளல்.
- காயம் குணமடைந்து ஜபீரத்தை கழற்றிய பின் வழமை போல் வுழூ செய்து தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.






## பயிற்சி

1. தயம்மும் என்றால் என்ன?
2. தயம்மும் செய்ய முடியுமான சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
3. தயம்முமில் உட்படுத்தப்படும் உறுப்புகள் எவை?
4. ஜபீரத் என்றால் என்ன?
6. சுத்தம் கட்டாயமாகத் தேவைப்படும் மூன்று இபாதத்துக்களைக் குறிப்பிடுக.
7. சிறுதொடக்கு என்றால் என்ன? அதை நீக்குவதற்கு என்ன செய்ய வேண்டும்?
8. பெருந்தொடக்கு என்றால் என்ன? அதைவிட்டு நீங்குவதற்கு என்ன செய்ய வேண்டும்?
9. வுழூ செய்வதால் கிடைக்கும் பயன்களைக் குறிப்பிடுக.